இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 220 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – பங்குனி 07 – வெள்ளிக்கிழமை 21 மார்ச் 2025 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 220 : Thiruvalluvar Year - 2056 - Panguni 07 - Friday 21 March 2025 - Kovai ★★ 16 Pages ₹ 5.00






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.3.2025) செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் சென்னை, எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சிந்துவெளி நாகரிகத்தை முதன்முதலில் வெளிப்படுத்தி திராவிட நாகரிகம் எனும் கருதுகோளுக்கு வழிவகுத்த பிரிட்டிஷ் இந்தியாவின் தொல்லியல் துறை தலைமை இயக்குநர் சர் ஜான் ஹுபர்ட் மார்ஷல் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து, அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, மு.பெ.சாமிநாதன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், ஏ.எம்.வி. பிரபாகரராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நிதித் துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், அரசு அருங்காட்சியகங்கள் துறை ஆணையர் திருமதி கவிதா ராமு, செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் ஆர்.பாலகிருஷ்ணன் (ஓய்வு) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சிந்துவெளி நாகரிகத்தை திராவிட நாகரிகம் எனும் கருதுகோளுக்கு வழிவகுத்த

# சர் ஜான் ஹுபர்ட் மார்ஷல் திருவுருவச் சிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, மார்ச் 21-**

**எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் ரூ.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள சிந்துவெளி நாகரிகத்தை முதன்முதலில் வெளிப்படுத்திய பிரிட்டிஷ் இந்தியாவின் தொல்லியல் துறை தலைமை இயக்குநர் சர் ஜான் ஹுபர்ட் மார்ஷல் அவர்களின் திருவுருவச் சிலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.3.2025) செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் சென்னை, எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சிந்துவெளி நாகரிகத்தை முதன்முதலில் வெளிப்படுத்தி திராவிட நாகரிகம் எனும் கருதுகோளுக்கு வழிவகுத்த பிரிட்டிஷ் இந்தியாவின் தொல்லியல் துறை தலைமை இயக்குநர் சர் ஜான் ஹுபர்ட் மார்ஷல் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார்.

**சர் ஜான் ஹுபர்ட் மார்ஷல்**

சர் ஜான் ஹுபர்ட் மார்ஷல் அவர்கள் இங்கிலாந்து நாட்டின் செஸ்டர் நகரில் 19.3.1876 அன்று பிறந்தார். 1902ஆம் ஆண்டு தனது 26 வயதில் இந்தியத் தொல்லியல் கழகத்தின் தலைமை இயக்குநராகப் பொறுப்பேற்றார். 1924ஆம் ஆண்டு செப்டம்பர் 20ஆம் நாள் வரலாற்றுச் சிறப்புமிகுந்த சிந்துவெளிப் பண்பாட்டின் கண்டுபிடிப்பை உலகுக்கு அறிவித்தார். இந்தியத் துணைக் கண்ட வரலாறு பற்றி அதுவரை நிலவிய புரிதல்களைப் புரட்டிப் போட்டது இந்த அறிவிப்பு. சிந்துவெளிப் பண்பாட்டின் மொழி குறித்த திராவிடக் கருதுகோளுக்கு வித்திட்டார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.3.2025) செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் சென்னை, எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சிந்துவெளி நாகரிகத்தை முதன்முதலில் வெளிப்படுத்தி திராவிட நாகரிகம் எனும் கருதுகோளுக்கு வழிவகுத்த பிரிட்டிஷ் இந்தியாவின் தொல்லியல் துறை தலைமை இயக்குநர் சர் ஜான் ஹுபர்ட் மார்ஷல் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, மு.பெ.சாமிநாதன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், ஏ.எம்.வி. பிரபாகரராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நிதித் துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், அரசு அருங்காட்சியகங்கள் துறை ஆணையர் திருமதி கவிதா ராமு, செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் ஆர்.பாலகிருஷ்ணன் (ஓய்வு) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சர் ஜான் ஹுபர்ட் மார்ஷல் இந்தியத் தொல்லியல் கழகத்தின் தலைமைப் பொறுப்பு வகித்த காலத்திலேயே இங்கிலாந்து நாட்டின் தொல்லியல் அறிஞர் அலெக்ஸாண்டர் ரீ மூலம் ஆதிச்சநல்லூர் அகழாய்வுகள் (1903-04) நடைபெற்றன. தமிழ் மண்ணின் தொன்மையை உலகம் அறிவதற்கு வித்திட்ட சர் ஜான் ஹுபர்ட் மார்ஷல் அவர்கள் 17.8.1958 அன்று மறைந்தார்.

**சர் ஜான் ஹுபர்ட் மார்ஷல் திருவுருவச்சிலை**

சென்னை, எழும்பூர் அருங்காட்சியக அரங்கில் 5.01.2025 அன்று நடைபெற்ற சிந்துவெளிப் பண்பாட்டுக் கண்டுபிடிப்பு நூற்றாண்டு நிறைவு பன்னாட்டுக் கருத்தரங்கு தொடக்க விழாவில் தலைமையுரை ஆற்றிய முதலமைச்சர் அவர்கள், சிந்துவெளிப் பண்பாட்டை கண்டுபிடித்து உலகிற்கு அறிவித்ததன் மூலமாக, நம்முடைய வரலாற்றையும், பெருமையையும் நிலை நிறுத்தி காட்டியவர் சர் ஜான் மார்ஷல். அவரைச் சிறப்பிப்பது தமிழ்நாடு அரசுக்குப் பெருமையாகும் என்றும், சிந்துவெளிப் பண்பாடு பேசப்படும் வரைக்கும், ஜான் மார்ஷல் அவர்களுக்கு சிலை வைத்தது திராவிட மாடல் அரசு என்ற பெருமையும் நிலைக்கும் என்றும் புகழஞ்சலி செலுத்தி, பிரிட்டிஷ் இந்தியாவின் தொல்லியல் துறை தலைமை இயக்குநர் சர் ஜான் ஹுபர்ட் மார்ஷல் அவர்களுக்கு திருவுருவச் சிலை அமைத்திட அடிக்கல் நாட்டினார்.

சர் ஜான் ஹுபர்ட் மார்ஷல் அவர்களின் புகழுக்கு பெருமை சேர்க்கின்ற வகையில் சென்னை எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவச் சிலையை முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், ஏ.எம்.வி. பிரபாகரராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நிதித் துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், அரசு அருங்காட்சியகங்கள் துறை ஆணையர் திருமதி கவிதா ராமு, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் ஆர்.பாலகிருஷ்ணன், (ஓய்வு) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## சர்வதேச விண்வெளி மையத்திலிருந்து 287 நாட்களுக்குப் பிறகு

# சுனிதா வில்லியம்ஸ் பத்திரமாக பூமிக்குத் திரும்பியதில் மகிழ்ச்சி!

## சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு – வாழ்த்து!



**சென்னை, மார்ச் 21 -**

**9 மாதங்களுக்குப் பிறகு சர்வதேச விண்வெளி மையத்திலிருந்து டிராகன் விண்கலம் மூலம் சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட 4 வீரர்கள் அதிகாலை 3.27 மணிக்கு ஃபுளோரிடா கடற்பகுதியில் தரையிறங்கினர்.**

9 மாத தவிப்புக்கு பிறகு சர்வதேச விண்வெளி மையத்திலிருந்து சுனிதா வில்லியம்ஸ், பேரி வில்மோர் உட்பட 4 பேருடன் டிராகன் விண்கலம் 18.03.2025 அன்று காலை 10:35 மணிக்கு விண்வெளி மையத்தில் இருந்து வெற்றிகரமாக பிரிந்தது. பின்னர் சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து படிப்படியாக விலகி பூமியை சுற்றி வந்த டிராகன் விண்கலம், 5 படி நிலைகளை கடந்து பூமியை நோக்கி பயணித்தது. விண்வெளியின் கடைசி படிநிலையில் இருந்து, பூமியின் காற்று மண்டலத்திற்குள் நுழையும் பணி மிகவும் சவால் மிகுந்ததாக அமைந்திருந்தது. 18 ஆயிரம் அடி உயரத்தில் 2 பாராசூட்டுகள் உதவியுடனும், 6 ஆயிரம் அடி உயரத்துக்கு வந்தபோது 4 பாராசூட்டுகள் உதவியுடன் மெதுவாக தரையிறங்கியது. பின்னர் திட்டமிட்டபடி அமெரிக்காவின் புளோரிடா கடல்பகுதியில் அதிகாலை 3.27 மணிக்கு விண்கலம் தரையிறங்கியது.

தொடர்ந்து, படகுகளில் தயார் நிலையில் காத்திருந்த மீட்புக்குழுவினர், டிராகன் விண்கலத்தை பத்திரமாக சிறிய ரக கப்பலில் ஏற்றினர். தொடர்ந்து, டிராகன் விண்கலம் திறக்கப்பட்டது. அப்போது, விண்வெளி வீரர்கள் ஒவ்வொருவராக வெளியே அழைத்து வரப்பட்டனர். முதலில் நிக்கி ஹே வெளியே அழைத்து வரப்பட்டார். சுனிதா வில்லியம்ஸ் 3வது நபராக வெளியே கொண்டுவரப்பட்டார். அப்போது, உற்சாக மிகுதியில் சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட விண்வெளி வீரர்கள், மீட்புக் குழுவினருக்கு கையை அசைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

17 மணிநேர பயணத்தை முடித்து விண்கலத்தில் இருந்து வெளியே கொண்டுவரப்பட்ட 4 விண்வெளி வீரர்களும், மருத்துவ பரிசோதனைக்கு அழைத்துச்செல்லப்பட்டனர். சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட 4 பேரும், அடுத்த சில மாதங்களுக்கு உடல் நிலையை இயல்பு நிலைக்கு திரும்புவதற்காக மருத்துவக்குழுவினரின் தொடர் கண்காணிப்பில் வைக்கப்பட உள்ளனர். 9 மாதங்களுக்கு பிறகு பூமிக்கு திரும்பியுள்ள சுனிதா வில்லிம்ஸ் உள்ளிட்ட குழுவினரின் உடல் நிலை சீராக சிறிது காலம் ஆகும் என்று முன்னாள் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் 9 மாதங்களுக்குப் பிறகு விண்வெளியிலிருந்து பூமிக்குத் திரும்பிய சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்டோருக்கு சட்டப்பேரவையில் பாராட்டும், வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து பூமிக்குத் திரும்பிய சுனிதா வில்லியம்ஸ் மற்றும் அவரது குழுவினருக்குப் பாராட்டுத் தெரிவித்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விண்வெளியில் உள்ள I.S.S. எனப்படும் சர்வதேச விண்வெளி நிலையத்தில் 287 நாட்களாக தங்கியிருந்த இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ் அவர்களும், புட்ச் வில்மோர் அவர்களும் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டதால், பூமிக்குத் திரும்ப இயலாத நிலை ஏற்பட்டது. இவர்களது உடல்நிலை பாதிக்கப்படும் எனவும், உயிருக்கு ஆபத்து எனவும் பல தகவல்கள் வெளி வந்தன. இருந்தும், அந்த விண்வெளி மையத்தில் அவர்கள் அயராது தங்களது பணிகளை மேற்கொண்டு வந்தனர்.**

**இந்த நிலையில், ஃபால்க்கன்9 எனும் ராக்கெட்டுடன், டிராகன் எனும் விண்கலம் அனுப்பப்பட்டு சர்வதேச விண்வெளி நிலையத்தைச் சென்றடைந்தது. இதன்மூலமாக சுனிதா வில்லியம்ஸ் அவர்களும், புட்ச் அவர்களும், அங்கிருந்த மேலும் 2 வீரர்களோடு இணைந்து பயணித்து, பத்திரமாக புளோரிடா அருகே கடலில் தரையிறங்கினர்.**

**அவர் பத்திரமாக மீண்டும் பூமிக்கு வந்தடைந்த செய்தி, நம் அனைவரையும் மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது. இத்தருணத்தில் சுனிதா வில்லியம்ஸ் அவர்களுக்கும், அவரை பத்திரமாக பூமிக்கு அழைத்து வருவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டவர்களுக்கும் நமது மனமார்ந்த பாராட்டுக்களையும், நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.